padippakam



# வீடற்ற தர்மபாலாவின் இனவாதம்

## பகுதி II

4


## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திற்கான அடிப்படை கி.பி 1839 லேயே இடப்பட்டு விட்டது. வலன்சிறீ சித்தானந்த தேரோ என்பவர் 1839 -ல் கிறிஸ்தவப் பாதிப்பிலிருந்து பௌத்தத்தைக் காப்பாற்றுவதற்காக பரமதம்ம நசேத்திய என்னும் அமைப்பை ஆரம்பித்தார். இவ் அமைப்பு பௌத்தம், சிங்களம், பாளி என்பவற்றின் தனித்துவத்தையும், பௌத்த சிங்களவர்கள், பௌத்த சிங்கள இலக்கியங்களையும் படிக்கவேண்டிய தேவையையும் பௌத்த சிங்களப் பண்பாட்டை கட்டிக்காக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியது.

இந்த அமைப்பின் வழியில் பிற்காலத்தில் வந்த மிகுந்துவத்த குணானந்த தேரோ, ஹிக்கடுவ சிறி அமங்க்ல நாயக்க தேரோ ஆகியோர், பௌத்த சிங்கள மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்து வைத்தனர்.

1873-ம் ஆண்டு பாணந்துறையில் மிகுந்துவத்த குணானந்த தேரோ வணபிதா டேவிட்.டி .சில்வா என்ற கிறிஸ்தவ மத குருவுடன் பௌத்தமா, கிறிஸ்தவமா சிறந்தது என்ற ஒரு பகிரங்க விவாதத்தை நடத்தினார். ஆங்கிலம், சிங்களம் என்ற இரு மொழிகளிலும் புலமையும், கிறிஸ்தவ மதம் பற்றி குறிப்பாக பைபிள் பற்றி நல்ல அறிவும் பெற்றிருந்த குணானந்ததேரோ தனது வாதத்திறமையால் கிறிஸ்துவத்தை விட பௌத்தமே உயர்ந்தது எனவும் கிறிஸ்தவர்களுடைய பிரச்சாரங்கள் அனைத்தும் பொய் என்றும் நிரூபித்திருந்தார்.

இந்தப் பகிரங்க விவாதத்தினால் கவரப்பட்ட அமெரிக்கரான கேர்னல் ஒல்கொட் என்பவர், இலங்கைக்குச் சென்று தன்னை ஒரு பௌத்தத் தொண்டனாக மாற்றிக் கொண்டார். இது, அக்காலத்தில் வெள்ளையர்களே உயர்ந்தவர்கள் என்று நம்பிக்கொண்டிருந்த சிங்களவர்களுக்கு தங்களது சிங்கள மொழியும் பௌத்த மதமும் உயர்ந்தது என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது.



இப் படம் கோப்பிக் காலத்தைச் சித்தரிக்கும் படம். கோப்பி பதப்படுத்தப்படும் ஆலையும் தொழிலாளர்களும்

கண்டியச் சிங்களவர்கள், கரையோரச் சிங்களவர்கள் என்று பிளவுபட்டுக் கொண்டு, ஒருவருடன் ஒருவர் சண்டை பிடித்துக் கொண்டிருந்த சிங்களவர் இனத்தை இந்த சம்பவங்கள் ஒன்றிணைய வைத்தன. பௌத்த மதத்தையும் பௌத்த நாடான இலங்கையையும் (தம்மதுபீபம்) பாதுகாக்கும் பொறு-ப்பு ஆரிய சிங்கள மக்களுக்கு புத்த பெருமானால் அளிக்கப்பட்டது என்ற கருத்து உருவாக்கப்பட்டது.

பத்திரிகைகள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்களில். பௌத்த சிங்களவர்களை கதாநாயகர்களாகவும், கிறிஸ்தவர்களையும் மற்றவர்களையும் வில்லன்களாக சித்தரிக்கும் நாவல்களும், சிறுகதைகளும் வெளியிடப்பட்டிருந்தன.



இப் புகைப்படத்தில் இருக்கும் தொழிலாளர்கள் கண்டியில் இருந்து கல்லோயாவுக்கு அனுப்பப் பட்டதாக 1908-ம் ஆண்டில் வெளியான ஒரு நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடக்ககாலத்தில் பௌத்த மறுமலர்ச்சி இயக்கம், கிறிஸ்தவர்களுக்கு, அதுவும் கிறிஸ்தவர்களாக மாறிய சிங்களவர்களுக்கு மட்டுமே எதிராக இருந்தது. அதை தமிழர்களுக்கு எதிரான இயக்கமாக மாற்றியதில் முக்கிய பங்கு வகித்தவர் அநகாரிக தர்மபாலா.

கொழும்பு புறக்கோட்டையில் இருந்த வீட்டுத்தளபாட வியாபாரி ஒருவரின் மகனாகப் பிறந்த 'தர்மபாலா' முதலில் ஆங்கிலேயப் பாணியிலேயே வளர்க்கப்பட்டு, ஆங்கிலப் பாடசாலைக்கே கல்வி கற்க அனுப்பப்பட்டார். மேலைத் தேயப் பாணியில் டொன் டேவிட் ஹேலவிதாரண என்றே அவருக்கு பெற்றோர் பெயர் வைத்திருந்தனர். ஆனால், பின்னால் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக அநகாரிக தர்மபாலா என்று தன்னுடைய பெயரை மாற்றிக் கொண்டார். அநகாரிக என்றால் வீடற்றவன் என்று அர்த்தமாகும்.

சிங்கள பௌத்த தேசியவாதத்தை வளர்ப்பதற்கு பெரிதும் பாடுபட்ட அநகாரிக தர்மபாலா, சிங்களவர்களை தவிர மற்ற அனைவருமே இலங்கைக்கு வந்தேறுகுடிகள் என்ற கருத்தை முன்வைத்து, 'மண்ணின் மைந்தர்கள்' பிரச்சாரத்தை முடுக்கிவிட்டார். துட்டகைமுனுவுக்கு புத்துயிரூட்டி, அவனை சிங்கள பௌத்தர்களின் இலட்சிய புருஷனாகக் காட்டி அவர்களை எழுச்சி கொள்ள வைக்க முயற்சி செய்தார்.

அவருடைய பேச்சுக்களும், எழுத்துக்களும் முழுக்க முழுக்க சிங்களவர்கள் அல்லாதவர்களுக்கு எதிராக இருந்தது.

ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். நாங்கள் சிங்கத்தின் இனம் என்பதை மறந்து விட வேண்டாம். எமது மதத்திற்கும், எமது குழந்தைகளுக்கும், குழந்தைகளின் குழந்தைகளுக்கும் பெரும் பணியாற்ற வேண்டிய பொறுப்பு எமக்குண்டு. எமது புனித நாட்டை இந்துமதப் பிரியர்களும், விஸ்கி வியாபாரிகளும் சீரழிப்பதற்கு இடமளிக்கக்கூடாது. வரலாற்றுப் பெருமை மிக்க இனமான ஆரிய இனத்தின் இனிமை மேன்மையான கௌரவம் மிக்க எங்கள் குழந்தைகள் இன்று மதுப்பிரியர்களுக்கும், மாட்டிறைச்சி உண்பவர்களுக்கும் பௌத்த விரோதிகளான அந்நியர்களுக்கும் அடிமையாவதா? என்றெல்லாம் அவரது பேச்சுக்களும் எழுத்துக்களும், வெளிப்படையாகவே பௌத்த சிங்கள இனவாதத்தை கக்கித்தள்ளின.

**கிறிஸ்தவ மதம் பற்றி குறிப்பாக பைபிள் பற்றி நல்ல அறிவும் பெற்றிருந்த குணானந்ததேரோ தனது வாதத்திறமையால் கிறிஸ்துவத்தை விட பௌத்தமே உயர்ந்தது எனவும் கிறிஸ்தவர்களுடைய பிரச்சாரங்கள் அனைத்தும் பொய் என்றும் நிரூபித்திருந்தார்.**

மலையகத் தொழிலாளர்களைப் பற்றி அவர் குறிப்பிடுகையில் ஆங்கிலேயர்கள் தென்னிந்தியாவின் கீழ் சாதித் தமிழர்களை எமது பெருமைமிக்க தீவில் கொண்டுவந்து குடியேற்றி விட்டனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

அநகாரிக தர்மபாலாவின் இத்தகைய பேச்சுக்களைக் கேட்டும் எழுத்துக்களைப் படித்தும் பியதாசா சிறிசேனா, வாலிசிங்க ஹரிச்சந்திரா உட்பட ஏராளமானோர், காவிஉடை தரித்து பௌத்த சிங்கள மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர்ந்து கொண்டனர்.

இக்கால கட்டத்தில், ஆங்கிலப்பாடசாலைகளுக்கு இணையாக கொழும்பு, கண்டி மற்றும் தென்பகுதி நகரங்களில் பௌத்த சிங்களக் கல்வி போதிப்பதாக ஆனந்த, நாலந்த கல்லூரிகள் நிறுவப்பட்டன.

இவ்வாறு வளர்ச்சி பெற்ற பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் செயற்பாடுகள் காரணமாக 1883-ம் ஆண்டு கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியில் முதன்முதலாக கிறிஸ்தவர்களுக்கும் பௌத்தர்களுக்குமிடையிலான கலவரம் மூண்டது.

1883-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கொட்டாஞ்சேனை புனித லூசியா தேவாலயத்தில் ஈஸ்டர் பண்டிகைக் கொண்டாட்டங்கள் நடை பெற்றுக் கொண்டிருந்த போது, அருகிலிருந்த புத்தவிகாரையில் மிகுத்துவத்தை குணானந்ததேரோ என்ற பிக்கு சில சடங்குகளை ஏற்பாடு செய்திருந்தார். இது தமக்கு எதிரான செயல் என்று கிறிஸ்தவர்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர். பௌத்தர்கள், 'இல்லை இந்த மதச் சடங்கை நடத்துவது எமது உரிமை' என்று அடம்பிடிக்க ஈற்றில் கிறிஸ்தவர்களுக்கும், பௌத்தர்களுக்கும் இடையேயான பெரிய மதக்கலவரம் ஒன்று ஏற்பட்டது. இதில் ஒருவர் கொல்லப்பட 12 பொலீஸ்காரர் உட்பட 30 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தக் கலவரம் தொடர்பாக விசாரணை நடத்திய விசாரணைக்குழு, குணானந்ததேரோவையும் கண்டித்த போதும், பௌத்தர்களின் கிறிஸ்தவ எதிர்-ப்பு இயக்கத்தையே அதிகம் குற்றம் சாட்டியிருந்தது. இது சிங்கள பௌத்தர்களை ஆத்திரப்படவைத்தது.

- நக்கீரன்

படிப்பகம்